## சாலை விபத்தில் மரணமடைந்த 6 கழகக் குடும்பங்களுக்கு - தி.மு.க. சார்பில்

# தலா ரூ.10 லட்சம் வீதம் ரூ.60 லட்சம் ரூபாயினை - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## இதுவரை 18 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ.1 கோடியே 80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது!

சென்னை, பிப். 15–

**மதுரையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் அறிவித்தபடி, முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாலை விபத்தில் மரணமடைந்த ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம். லிங்கேஸ்வரன் – மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என். திருப்பதி – நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்துராஜா – இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து – திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா – திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ.பரத்குமார் ஆகிய 6 குடும்பங்களுக்கு தி.மு.க. சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் 60 இலட்சம் ரூபாயினை நேற்று முன்தினம் (13.2.2026) குடும்ப நிவாரண நிதியாக வழங்கினார். இதுவரை 18 கழக உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு ரூ. 1 கோடியே 80 லட்சம் வழங்கப்பட்டுள்ளது,**

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்."என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க. முத்தமிழ்செல்வன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் - திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் - சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் - விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான மு.இராமதாஸ் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உறுப்பினரான கு.சரவணகுமார் ஆகிய 12 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம். லிங்கேஸ்வரன் அவர்கள், 29.05.2025 அன்று சத்தி - அத்தானி ரோடு, ஜி.எச். ரோடு இந்திரா நகர் பிரிவு அருகில் அவர் சென்ற இருசக்கரம் வாகனம் மீது எதிரில் வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்தில் சிக்கியும் – மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என். திருப்பதி அவர்கள், 21.08.2025 அன்று பரமனாண்டி தோப்பு, பழனி ஆண்டவர் எடை மேடை அருகில் அவர் சென்ற இருசக்கரம் வாகனம் மீது எதிரில் வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்தில் சிக்கியும் – நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்துராஜா அவர்கள் 07.10.2025 அன்று நாமகிரிப்பேட்டை மெயின் ரோடு, வெள்ளாளப்பட்டி பிரிவு ரோடு அருகில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது லாரி மோதி விபத்தில் சிக்கியும் - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து அவர்கள், கடந்த 27.10.2025 அன்று சாலை விபத்தில் சிக்கியும் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா அவர்கள், 02.11.2025 அன்று கோவிந்தபேரி – இராஜாங்கபுரம் ரோடு அருகில் இருசக்கர வாகனம் மோதி விபத்தில் சிக்கியும் - - திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ. பரத்குமார் அவர்கள், 09.11.2025 அன்று பொள்ளாச்சி தாலுக்கா, நடுப்புணி ரோடு, வாமானா கார்டன், சேத்துகுட்டை, தெற்கு ஓடை சந்திப்பு அருகில் வாகன விபத்தில் சிக்கியும் உயிரிழந்த இந்த ஆறு குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள்


**ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம். லிங்கேஸ்வரன் அவர்களின் மனைவி திருமதி எல்.ஞானசெல்வி அவர்களிடமும் –**





**மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என். திருப்பதி அவர்களின் மனைவி திருமதி தி.சரண்யா அவர்களிடமும் –**




**நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்துராஜா அவர்களின் மனைவி திருமதி எம்.சரண்யா அவர்களிடமும் –**





**இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து அவர்களின் மனைவி திருமதி எம்.ருக்மணி அவர்களிடமும் –**




**திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா அவர்களின் மகன் திரு.கே.கார்த்திக்ராஜா அவர்களிடமும் –**




**திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ.பரத்குமார் அவர்களின் மனைவி திருமதி ஆர்.எஸ்.தனுஸ்ரீ அவர்களிடமும் –**




**நேற்று முன்தினம் (13–02–2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் வழங்கினார்.**

---

## முதல்வரின் அதிரடி சிக்ஸர்! மகிழ்ச்சி கடலில் மகளிர்!

# 1.31 கோடி மகளிருக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு!

## "தினகரன்" நாளேடு வரவேற்பு!

சென்னை,பிப்.15-

**1.31 கோடி மகளிர்க்கு ரூ.5 ஆயிரம் என்ற முதல்வரின் அதிரடி சிக்ஸரால் மகளிர் மகிழ்ச்சி கடலில் உள்ளனர் என்று, 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.**


தினகரன்
பிப்ரவரி 14, 2026 சனிக்கிழமை
மகிழ்ச்சி கடலில் மகளிர்

இதுகுறித்து 14.2.2026 தேதிய 'தினகரன்' தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–

மகிழ்ச்சியில் பெருமகிழ்ச்சியே அடுத்தவரை மகிழ வைத்து பார்ப்பதுதான் என்பார்கள். அந்த வகையில் பொங்கல் பரிசுத் தொகை ரூ.3 ஆயிரம் கிடைத்த மகிழ்ச்சியில் தமிழக மக்கள் உற்சாகமாக பொங்கல் கொண்டாடி மகிழ்ந்தனர். அதிலிருந்து மீள்வதற்குள் இன்ப அதிர்ச்சியாக நேற்று காலை மகளிர் உரிமைத் தொகை பெறும் 1.31 கோடி பேருக்கு ரூ.5 ஆயிரம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் என்ற வகையில் ரூ.3,000, மே மாதத்தில் கோடைக்கால சிறப்பு செலவுகளுக்காக ரூ.2 ஆயிரம் என ரூ.5 ஆயிரத்தை சேர்த்து வழங்கி தமிழக மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். 2021 சட்டமன்ற தேர்தலின்போது மகளிருக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்படுமென தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

கொரோனா கால உதவித்தொகையும் வழங்கப்படுமென அறிவித்தது. அ.தி.மு.க. ஆட்சி அவலத்தால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டிருந்த நிலையிலும் கூட, பொருளாதார சூழலை சமாளித்து கொரோனா உதவித்தொகை ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டது. மேலும், மகளிர் உதவித்தொகை திட்டத்துக்கு தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 2023, செப். 15ம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்தநாளன்று மகளிர் உதவித்தொகை திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதுவரை இந்த திட்டத்தின்படி மகளிர் கணக்கில் ரூ.34,000 வரை வரவு வைக்கப்பட்டுள்ளது. ஒரு சேமிப்பாக இதை வைத்திருந்தால் கூட, நடுத்தர மற்றும் ஏழை, எளிய குடும்பத்துக்கு இது மிகவும் பயனுள்ள தொகையாகும். முதல்கட்டமாக 1.13 கோடி பேருக்கு வழங்கப்பட்ட இத்தொகை, விரிவுப் படுத்தப்பட்டு 1.31 கோடி பேருக்கு வழங்கப்பட்டது. தகுதியுள்ள அனைவருக்குமே உரிமைத் தொகை கிடைத்துள்ள தால் பெண்கள் உற்சாகத்தில் திளைக்கின்றனர்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த வகையில் தை மாதம் நெருங்கும் நேரத்தில் பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம், நேற்று ரூ.5 ஆயிரம் என ஒரு மாத காலத்திற்குள் பெண்கள் கையில் ரூ.8 ஆயிரம் வரை வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே, மகளிர் விடியல் பேருந்து பயணம் மூலம் இலவச பயணம் மேற்கொள்ளும் பெண்கள், மாதம் ரூ.900 முதல் ரூ.1,300 வரை சேமிப்பதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. அந்த வகையில் தங்களது குடும்ப நிலையை உணர்ந்து திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு தமிழக மக்கள் தங்களது பெருநன்றியினை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "தேர்தலைக் காரணம் காட்டி அடுத்த 3 மாதங்களுக்கு இந்த மகளிர் உரிமை தொகையை நிறுத்த சூழ்ச்சி செய்வதாகவும், வழக்கு தொடர சிலர் முயல்வதாகவும் தகவல் கிடைத்துள்ளது. கடும் கோடை காலத்தில் இப்பணம் நிறுத்தப்பட்டால் உங்களுக்கு ஏற்படும் துன்பத்தை என்னால் உணர முடிகிறது. அதை மனதில் கொண்டே பிப்ரவரி மாதத்தோடு அடுத்த 2 மாதங்கள், கோடை சிறப்பு நிதி என ரூ.5 ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

அடுத்த திராவிட மாடல் 2.0 ஆட்சிக் காலத்தில் உங்களுடைய உரிமைத்தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படும்" என கூறியுள்ளார். மகளிர் உரிமைத்தொகை வரவுக்கு காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துகளையும் கட்சித்தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர். ஏற்கனவே, தமிழக அரசின் இத்திட்டத்தை பின்பற்றி, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும், மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.


கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறும் மகளிருக்கு நேற்று முன்தினம் ரூபாய் 5000 வழங்கியதமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் செஞ்சியில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கினர். உடன்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கயல் தினகரன்

**பிப்ரவரி 15 (2024)**



திராவிட இயக்க கருத்தியலோடு கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்ட தொடக்க கால உறுப்பினர்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக கழக மாநில இலக்கிய அணி பொருளாளர் பொறுப்பு வகித்தவர்.

1964ஆம் ஆண்டு கழக நாளேடான 'முரசொலி'யின் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலி உருவாக்கிய எண்ணற்ற எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

மிசா காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கருத்துகளை, அவர் ஆசிரியராக இருந்த தமிழ்முரசு பத்திரிகையில் வெளியிட்டவர்.

சென்னை நூலக ஆணையக்குழு தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் "கலைஞர் விருது" பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## தலைமைக்கு தான் இன்னும் அரசியலில் இருப்பதை காட்டிக்கொள்ள சொந்தமாக சிந்திக்கும் திறன் இல்லாத

# ரஃபேல் புகழ் அண்ணாமலை நாவை அடக்க வேண்டும்!


## கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கண்டன அறிக்கை!

திருவனந்தபுரம், பிப்.15–

ரஃபேல் புகழ் அண்ணாமலை நாவை அடக்க வேண்டும் என கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளார்.'

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் பாரதிய ஜனதா கட்சி கை கழுவிய ரஃபேல் புகழ், ஆருத்ரா புகழ், சென்னை விமான நிலைய நகை கடத்தல் புகழ் இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் ஏட்டிலும் அடங்காது பாட்டிலும் அடங்காது அந்த அளவிற்கு பொய் மட்டுமே பேசி தன்னுடைய தலைமைக்கு தான் இன்னும் அரசியலில் இருப்பதை காட்டிக் கொள்ள சொந்தமாக சிந்திக்கும் திறன் இல்லாத திருவாளர் அண்ணாமலை நேற்றைய தினம் ஒரு யூடியூப் சேனலுக்கு பேட்டி தந்துள்ள விசயம் அறிந்து நாடே சிரிக்கும் அளவிற்கு அமைந்துள்ளது.

கேரளாவிலும் தி.மு.க.வினர் கொள்ளை எனும் தலைப்பில் அண்டை மாநிலத்திலும் தி.மு.க.வினர் கொள்ளை அடிக்கிறார்கள் என்று பேட்டி கொடுத்து வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று உளறி உள்ளார். அங்கே நடந்துள்ளது ஒரு நகை திருட்டு சம்பவம் உடனடியாக செயல்பட்டு காவல் துறையினர் அந்த சம்பவத்தில் தொடர்புடைய நபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.



இந்த சம்பவம் ஒரு நகை திருட்டு சம்பவம் இந்த சம்பவத்திற்கும் கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. அப்படி இருக்கும் போது கேரள மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடர்புபடுத்தி அறிக்கை வெளியிடுவது பேட்டி கொடுப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது ஆகும்.

பல வழிகளில் மோசடி செய்து பணம் சம்பாதிப்பது, கொள்ளை அடிப்பவர்களை காப்பாற்ற கைக்கூலி பெறுவது எல்லாம் அண்ணாமலைக்கு கைவந்த கலை.

உதாரணம் ஆருத்ரா மோசடி, தேவநாதன் யாதவ் ஃபைனான்ஸ் மோசடி, விவசாய கடன் மோசடி என்று சொல்லிக் கொண்டே போகலாம் ஏட்டிலும் அடங்காது பாட்டிலும் அடங்காது.

ஆகவே இது போன்ற தரங்கெட்ட பேட்டி, அறிக்கைகள் விடுவதை தவிர்க்க வேண்டும். இல்லையேல் கேரள மண்ணில் கால் வைக்க இயலாது என்பதை எச்சரிக்கையாகவே தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.